பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 32 (16—8—72) புதன் வெளியூர்: ஆவணி 1 (17—8—72) வியாழன் [இதழ்: 53

## தண்ணீர்ப் பஞ்சம்—சமாளிக்கத் தனி இரயில்

விஜயவாடா, ஆக. 16—
அரிசிக்காகவும், மாம்பழத்துக்காகவும் தனி இரயில்கள் சென்று கொண்டிருந்ததுபோல், இப்போது தண்ணீருக்காகவும் தனி வண்டிகளை இரயில்வேத் துறை விட்டுக்கொண்டிருக்கிறது.

'காலாவி' என்னும் பகுதியில் கடுமையான குடிநீர்ப் பற்றுக் குறை ஏற்பட்டிருப்பதையொட்டி பித்ரகுண்டாவிலிருந்து நாள்தோறும் இரண்டு தனி தண்ணீர் வண்டிகளை அப்பகுதிக்கு இரயில்வேத் துறை விட்டுக்கொண்டு வருகிறது.

# பெரியார்—அண்ணா ஆற்றிய சமுதாயப் பணி

## மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் பாராட்டு

### சாதி ஒழிந்த சமுதாயத்தை உருவாக்குவதில் தமிழகம் முன்னிற்கும் என நம்பிக்கை

சென்னை, ஆக. 16—
"சென்ற ஆண்டு பாகிஸ்தானுடன் நடைபெற்ற போரில் நாம் வெற்றியடைந்தோம்; ஆனால், வறுமை—சமுதாய ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றை நாம் இன்னமும் வெல்லவில்லை; அவை இன்னமும் நமது எதிரிகளாகவே இருந்துவருகின்றன; அவை அனைத்தும் வெல்லப்பட்டாலன்றி நாம் உண்மையான சுதந்தரத்தை அடைந்தவர்களாக மாட்டோம்.

"சமுதாயத்தில் சாதி வேற்றுமைகள் இருந்துவரும் வரையில், நாம் சோஷலிசத்தை அடைய முடியாது; சாதி வேற்றுமைகளை அகற்றுவதற்காக காந்தியடிகளும்—நேருவும் பாடுபட்டனர்.

"சாதிக் கொடுமைகளை ஒழித்துக் கட்டுவதற்காகத் தமிழகமும், பெரியார் ஈ.வெ.ரா.—அறிஞர் அண்ணா போன்ற தலைவர்களை அளித்துள்ளது; அவர்கள் ஆற்றிய பணி மகத்தானது; சாதி முறைகளை ஒழித்துக்கட்டுவதில் தமிழகம் முதலாவதாகத் திகழும் என்று நான் நம்புகிறேன்"

—என்று மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ஜெ ஜீவன்ராம் நேற்று, சென்னையில் நடைபெற்ற விடுதலை நாள் வெள்ளி விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்; மேலும் அவர் கூறியதாவது:—

"இந்திய அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் ஒவ்வொரு மாநிலமும் முன்னேற போதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருந்தனர்; மாநிலங்களில் பிறகு பலதரப்பட்ட கட்சிகளும் ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடும் என்று அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் அன்றைக்கே யூகித்து—அதற்குத் தகுந்தாற்போல அரசியல் சட்டத்தை வகுத்தனர்; எனவே ஆளுங் கட்சிகள் மாறுபட்டாலும், மத்திய—மாநில அரசுகளிடையே மோதுதல் ஏற்படாது.

இந்த நாடு எந்தக் குறிப்பிட்ட ஒரு கட்சியையும் சேர்ந்ததல்ல; அது, இந்த நாடு முழுவதற்கும்—அனைத்துக் கட்சிகளுக்கும் சொந்தமானதாகும்.

தமிழ்நாடு, மத்திய அரசிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு கட்சியால் ஆளப்படுகிறது; ஆயினும், இந்த இரு அரசுகளும் நாட்டை முன்னேறச் செய்வதில் கூட்டாகவும்—ஒற்றுமையாகவும் செயல்பட்டுவருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் குடியரசு நாளை, தலைமையமைச்சர் ஒவ்வொரு மாநிலத்துக்கும் வந்து கொண்டாட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. கருணாநிதி சொன்ன யோசனை வரவேற்கத்தக்கதாகும்; இந்த யோசனையை நான் தலைமையமைச்சரிடம் தெரிவிப்பேன்; சனநாயகத்தை வளப்படுத்துவதற்கு இந்த முறை பயனுள்ளதாக இருக்கும்."

## கோட்டையில் கொடியேற்று விழா

### ஆளுநருக்கு அணிவகுப்பு மரியாதை

### முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, ஆக. 16—
விடுதலை நாள் வெள்ளிவிழாவை முன்னிட்டு சென்னை—கோட்டையில் நேற்று காலை கொடியேற்று விழா சிறப்பாக நடைபெற்றது.

கொடியேற்றுவதற்காக ஆளுநர் கே. கே. ஷா வந்தபோது அவரை அரசுத் தலைமைச் செயலாளர் வரவேற்றார்; அங்கு அவருக்கு அணிவகுப்பு மரியாதை நடத்தப்பட்டது.

கொடியேற்று விழாவுக்கு முதல்வர் கலைஞர் மற்றும் அமைச்சர்கள், சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு, உயர் நீதிமன்ற நீதிபதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோர் வந்திருந்தனர்.

எல்லா மாநிலத் தலைநகர்களிலும் இதுபோன்று கொடியேற்று விழாக்கள் நடைபெற்றன.

### புதுடில்லியில்:

டெல்லி செங்கோட்டையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி கொடியேற்றிவைத்து உரையாற்றினார்.

சுதந்தரத்துக்காகப் பாடுபட்ட தியாகிகளை அவர் பாராட்டினார்; அவர்களுக்குத் தாமிரப் பட்டயங்கள் வழங்கப்பட்டன.

இந்திய மக்களின் ஒற்றுமை உணர்ச்சியை அவர் புகழ்ந்தார்; 'அந்த ஒற்றுமையால்தான் வங்கதேசப் பிரச்சினையில் நாம் வெற்றி பெற்றோம்' என்றார்.

அந்த வெற்றி ஓர் இராணுவ வெற்றி அல்லவென்றும், இந்தியாவின் சுதந்தரக் கொள்கைகள்—சிறந்த நடவடிக்கைகள்—நீதி ஆகியவைகளுக்குக் கிடைத்த வெற்றியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கடையநல்லூர் அருகில் இரயில் விபத்து

மதுரை, ஆக. 16—
சென்னைக்கு வந்துகொண்டிருந்த திருவனந்தபுரம்—சென்னை விரைவு வண்டியும், திருவனந்தபுரத்திற்குச் சென்று கொண்டிருந்த சென்னை—திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியும் கடையநல்லூர் பகுதியில் நேற்று இரவு மோதிக்கொண்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. மேற்கொண்டு தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

# எல்லோருக்கும் சமமான கல்வி

## ஏற்றத்தாழ்வற்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும்

### சனநாயக—சோஷலிச மலர்ச்சிக்கு ஜெகஜீவன்ராம் கூறும் வழி

### தமிழக அரசின் சாதி ஒழிப்புப் பணிகளுக்கு உளந்திறந்த பாராட்டு

சென்னை, ஆக. 16—
"நாட்டில் சனநாயகமும்—சோஷலிசமும் ஆழ வேர்விட்டுத் தழைக்க வேண்டுமென்றால், சாதி—சமய வேற்றுமையின்றி எல்லா மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான கல்வி கற்பிக்கப்பட வேண்டும்; மத்திய—மாநில அரசுகள் தங்களது சக்திகளை இத்துறையில் பயன்படுத்த வேண்டும்"

என்று மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜெ ஜீவன்ராம் இங்கு பேசுகையில் வலியுறுத்தினார்.

நேற்று மாலை 4-மணியளவில் சென்னை-வியாசர்பாடியில், அமைச்சர் ஜெ ஜீவன்ராம், டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சிக்கு முதலமைச்சர் கலைஞர் தலைமை வகித்தார்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

திரு. ஜெகஜீவன் ராம் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"மறைந்த டாக்டர் அம்பேத்கார்—அறிஞர் அண்ணா ஆகியோர் மேற்கொண்டிருந்த ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் என்ற இலட்சியம் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இந்தியாவில் துரதிருஷ்டவசமாக இன்று ஒரு தனி மனிதனின் மதிப்பு, அவனது திறமை—நடவடிக்கை—ஒழுக்கம் ஆகியவைகளால் நிர்ணயிக்கப்படுவதில்லை; அவனது பிறப்பை வைத்துக்கொண்டே அது நிர்ணயிக்கப்படுகிறது.

இன்று வசதி படைத்தோர் குழந்தைகள் பொதுப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர்; நடுத்தர நிலையிலுள்ளோர் பிள்ளைகள் நகராட்சிப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர்; உழைப்பாளிகளின் இலட்சக்கணக்கான குழந்தைகள் பள்ளிகளுக்கு போகாத நிலை இன்னும் இருந்து வருகிறது; இந்த மாறுபட்ட நிலை அகற்றப்பட்டே ஆக வேண்டும்.

சுதந்தரம் பெற்று 25 ஆண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

# மாநகரின் தூய்மை காக்கும் இயக்கம்

## சென்னையில் முதலமைச்சர் கலைஞர் துவக்கிவைத்தார்

### விடுதலை வெள்ளி விழாவையொட்டி மாநகராட்சி ஏற்பாடு

சென்னை ஆக. 16—
சுதந்தர வெள்ளி விழாவை முன்னிட்டு நகரைத் தூய்மையாக வைத்திருக்கும் இயக்கம் ஒன்று நேற்று துவக்கிவைக்கப்பட்டது.

மாநகராட்சியால் துவக்கப்படும் இந்த இயக்கத்துக்கு சீரணித் தொண்டர்கள் உதவி செய்வர்.

இந்த இயக்கத்தில் மாநகராட்சியைச் சேர்ந்த ஊதியமில்லா ஊழியர்களும் ஈடுபடுவர் என்றும், அதன்மூலம் நகரைத் தூய்மையாகவும்—ஒழுங்காகவும் வைத்திருக்க வேண்டியதன் அவசியம் மக்களிடையே வலியுறுத்தப்படும் என்றும் ஆணையர் தெரிவித்தார்.

"பிறகு, வேளி அலுவலகங்களைச் சேர்ந்த உடலுழைப்பில்லா ஊழியர்களும் இந்த இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்" என்றார் அவர்.

ஏற்கனவே இந்த இயக்கம் சில வட்டங்களில் செயல்பட்டு வந்திருக்கிறது; நேற்று ஜார்ஜ் டவுன் பகுதிக்கும் விரிவாக்கப்பட்டு—முதலமைச்சர் கலைஞர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

முதலமைச்சர் பேசும்போது, சீரணித் தொண்டர்களின் பணியினைப் பாராட்டினார்.

தமிழகமெங்கும் சீரணியினர் 1,221 பள்ளிக் கட்டடங்களையும், 948 சாலை இணைப்புக்களையும் அமைத்திருப்பதுடன் சுமார் 1,949 கால்வாய்கள் அல்லது கிணறுகளை ஆழப்படுத்தியிருப்பதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் இவர்கள் செய்த பணியின் மதிப்பு சுமார் ரூ. 1.30 கோடி இருக்கும் என்றும், இதில் அரசு செலவிட்டது ரூ. 54 இலட்சம் மட்டுமே என்றும் முதல்வர் தெரிவித்தார்.

அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

மேயர் திருமதி காமாட்சி செயராமன் வரவேற்றார்.

மாவட்டச் சீரணித் தலைவர் நீலநாராயணன் நன்றி கூறினார்.

## பொதுத் துறைத் தொழில்களின் முதலீடுகளில் தொழிலாளருக்கு 24 சதவிகிதம் பங்கு ஒதுக்கப்படும்-- ஐந்தாண்டுக் காலத்திற்குள் பேருந்துத் தொழில் முழுவதும் நாட்டுடைமையாகும்-- விடுதலைப் போர் வீரர்கட்குத் தரப்படும் மானியம் ரூ. 75 ஆக உயர்வு -- சிறை வாழ் கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பு--சிறையில் வ. உ. சிதம்பரனார் இழுத்த செக்கு சென்னையில் காட்சிப் பொருளாகும்.

# சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

சென்னை, ஆக. 14—

"எத்தனையோ சமதர்மத் திட்டங்கள் கொணர்ந்திங்கு செயல்படுத்தியுள்ளோம்; விழா எடுத்துக் கலைந்துவிடுவதால் மட்டுமே விழா நோக்கம் நிறைவாவதில்லை; அதனாலே, நாட்டிற்குச் சில மகிழ்ச்சிமிக்க செய்திகளைச் சொல்லவிழைகிறேன்.

"தமிழ்நாட்டில் அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் பேருந்துத் தொழில் முழுவதையும் தனியார் துறையிலிருந்து பொதுத் துறையாக ஆக்குவதற்கு விடுதலைத் திருநாள் வெள்ளி விழா நாள்முதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்; அக்கால அளவிற்குள் இத்திட்டத்தை முழுமையுறச் செய்வதற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

"ஏற்கனவே அறிவித்தபடி, பொதுத்துறை முதலீட்டில் 24 சதவிகிதப் பங்கு – தொழில் துறை நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்கேற்கும் வகையில் – ஒதுக்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

"தமிழ்நாட்டில் விடுதலைப் போர் வீரர்கட்கு – மூன்று திங்கள் சிறை சென்றோர் பட்டியல்படி – இப்போது 7,300 பேர்களுக்கு மாதந்தோறும் ரூ. 50 மானியமாக வழங்கப்படுகிறது; அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற – 25 வது விடுதலை ஆண்டு நினைவாக – இனிமேல் அந்தத் தியாகிகளுக்கு ரூ. 25 உயர்த்தி ரூ. 75 ஆக வழங்கப்படும்.

"விடுதலைத் திருநாள் விழாவினையொட்டி பல்வேறு பிரிவுகளின்கீழ் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பு செய்யப்பட்டு – அதன்படி 2,500 பேர் விடுதலை செய்யப்படுகின்றனர்"

என்பது போன்ற சலுகைகளை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆக. 14ம் நாள் நள்ளிரவு நடைபெற்ற சட்டப் பேரவை – மேலவை உறுப்பினர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையில், ஆரவாரப் பேரொலிக்கிடையே அறிவித்தார்; சிறைவாழ் கைதிகளுக்கான தண்டனைக் குறைப்புப் பற்றி அவர் வெளியிட்ட விவரங்கள் வருமாறு:—

10 ஆண்டுகளுக்குமேல் தண்டனை பெற்றவர்களுக்கு ஒன்றரை ஆண்டுக்கால தண்டனைக் குறைப்பு.

ஐந்தாண்டுகளுக்குமேல் பத்தாண்டுகளுக்குள் தண்டனை பெற்றவர்களுக்கு 9 மாதம் தண்டனைக் குறைப்பு.

ஓராண்டுக்குமேல் ஐந்தாண்டுக்குள்வரை தண்டனை பெற்றவர்களுக்கு நாலரை மாதம் தண்டனைக் குறைப்பு.

மூன்றுமாதங்களுக்குமேல் ஓராண்டுத் தண்டனை பெற்றவர்கள் பாதிக்காலத் தண்டனை அனுபவித்திருந்தால் மீதிக்காலத் தண்டனை குறைக்கப்பட்டு விடுதலையடைவார்கள்.

அதே கைதிகள் பாதிக்காலத் தண்டனை அனுபவிக்காதிருந்தால் மூன்று மாதம் தண்டனைக் குறைப்பு.

மூன்று மாதமும் அதற்குக் குறைவாகவும் தண்டனை பெற்றவர்கள் அனைவருமே விடுதலை செய்யப்படுவார்கள்.

## சிதம்பரனார் இழுத்த செக்கு காட்சிப் பொருளாகும்

"மற்றொரு மகிழ்ச்சிகரமான செய்தி -- தமிழக மக்களைப் பூரிப்பில் ஆழ்த்துகின்ற புதிய செய்தி!

சிலை வைத்துள்ளோம் சிதம்பரனாருக்கு -- சென்னைக் கடற்கரையில்; செப்டம்பர் திங்களில் அந்தச் செந்தமிழனின் சிலைதனைத் திறக்கத் தலைமை அமைச்சர் வருகிறார் -- தூத்துக்குடிக்கு!

சிலையான தமிழர் சிதம்பரனார் இழுத்திட்ட செக்கு ஒன்று, கோவைச் சிறையிலே கேட்பாரற்றுக் கிடக்கிறது!

அந்தச் சிங்க மறவன் இழுத்த செக்கினைச் சென்னைக்குக் கொண்டுவந்து -- சிறப்பான இடம் ஒன்றில் காட்சிப் பொருளாக ஆக்குவதற்குத் திட்டம் தீட்டியுள்ளோம்; இத்திங்கள் முடிவதற்குள், இது இனிது நிறைவேறும் என்றும் அறிவிக்கின்றேன்.

## தியாகத்தை போற்றிடுவோம்!

தியாகச் சின்னம் அன்றோ -- அந்தச் செக்கு! தியாகத்தை மதிப்பது அன்றோ நமது அரசு! தில்லையாடி வள்ளியம்மைக்குத் திருநகர் அமைத்ததன்றோ தமிழக அரசு!

அதனாலே, தியாகத்தைப் போற்றிடுவோம்! அந்தத் தியாகிகளைத் தெய்வமெனத் தொழுதிடுவோம்!

மண் காக்க -- மான மொழி காக்க -- கண் காக்கும் இமை போல வாழ்ந்து வீழ்ந்துபட்ட வீரர்குல நாயகர்க்கு இந்நாளில் அனைவருமே வணக்கம் செய்வோம்"

என்று முதலமைச்சர் கூறியதும், சட்டப் பேரவை மண்டபமே அதிர கரவொலி எழுந்தது!

## மாமல்லபுரத்தில் ஒலி -- ஒளிக் காட்சி

### மதுரையில் அமைக்கவும் மீண்டும் முயற்சி

### அமைச்சர் இராசாராம் தகவல்

சென்னை, ஆக. 11—

"மாமல்லபுரத்தில் ரூ. 20 இலட்சம் செலவில் ஒலி -- ஒளிக் காட்சியை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது"

என்று சட்டப் பேரவையில், அமைச்சர் க. இராசாராம் அவர்கள் அறிவித்தார்.

இத்தொடர்பில் பல்வேறு துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்ததாவது:—

"முதலில் மதுரை மீனாட்சி கோவிலில் இந்த ஒலி -- ஒளிக் காட்சியை அமைக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது; ஆனால் ஆத்திகர்கள் மாநாட்டில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாகக் காரணம் காட்டி மத்திய அரசு, மாமல்லபுரத்தில் இக்காட்சிக்கு ஏற்பாடு செய்ய முடிவு செய்துவிட்டது; இதற்காக மத்திய அரசு ரூ. 18 இலட்சம் கொடுக்கிறது; நமது அரசு ரூ 3 இலட்சம் கொடுக்கிறது.

"ஆறுகால பூசை நடைபெறும் கோவில்களில், ஒலி -- ஒளிக் காட்சி அமைக்கக் கூடாது என்று ஆத்திகர்கள் எதிர்ப்புக் கிளப்பியதால், மத்திய அரசு, மதுரையில் இதனை அமைக்க மறுத்துவிட்டது.

"நமது கோவில்களிலெல்லாம் சரித்திரத்துடன் பின்னிப் பிணைந்திருப்பதால், கோவில்களில் ஒலி -- ஒளிக் காட்சி அமைப்பதுதான் பொருத்தமாக இருக்கும்; இதனால் ஆத்திகத்துக்கு ஆபத்து ஒன்றும் வந்துவிடாது.

"மதுரை கோவிலில் இல்லாவிட்டாலும், திருமலைநாயக்கர் மகாலிலாவது இதனை அமைக்கலாம்; அதற்கான முயற்சியும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்."

## கத்தியே தொடாத டாக்டர்கள்

### பிரபல கண் டாக்டரின் வருத்தம்

சென்னை, ஆக. 14—

"அறுவைச் சிகிச்சை செய்யும் கத்தியைக் கையால் பிடித்துப் பார்க்காதவர்கள்கூட டாக்டர் பட்டம் பெற்றுவிடுகின்றனர்; நம்நாடு அந்த நிலைமையில் இருக்கிறது"

என்று, பம்பாயின் பிரபல கண் டாக்டரான பி. டி. பஸ் ராடி, தமிழ்நாடு கண் டாக்டர்களின் 25-வது மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டினார்; இத் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:—

"கண் சிகிச்சை செய்வதற்கான கத்தி எப்படி இருக்கிறது என்று தெரியாதவர்கள்கூட கண் டாக்டர்களாகி விடுகின்றனர்!

"செய்முறைப் பயிற்சியில் அதிகக் கவனம் செலுத்தாததே இதற்குக் காரணமாகும்; மாட போதனையின்போது இதற்கும் போதிய முக்யத்துவம் அளிக்க வேண்டும்."

## பெண்களுக்கான பாலிடெக்னிக்

### அதிகப்படுத்தும் திட்டம் இல்லை

சென்னை, ஆக. 14—

"ஆண்களுக்கான பாலிடெக்னிக் பள்ளிக்கூடங்களை அதிகமாகத் தொடங்கியிருப்பதுபோல் பெண்கள் பாலிடெக்னிக்குகளும் அதிகமாகத் தொடங்கப்படுமா?"

என்று, சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் சௌந்திரபாண்டியன் கேட்டார்.

"ஏற்கனவே பெண்களுக்கு 3 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன; அவை போதுமானவையாக கருதப்படுகிறது; மேலும் விரிவுப்படுத்துவதுபற்றி யோசிக்கப்படும்"

என்று, கல்வியமைச்சர் நாவலர் பதிலளித்தார்.

# இருட் குகையில் ஏற்றிவைத்த அகல் விளக்கை 25 ஆண்டுகளாகக் காக்கும் கரங்கள்

சென்னை, ஆக. 16—

இந்தியச் சுதந்தரத்திற்கு வயது இருபத்தைந்து; முறுக்கான பருவம்; வெற்றித் திருமகளை மணந்து வெள்ளிச் சிரிப்பு காட்டுகின்ற காளைப் பருவம்!

இந்த வீரச் செல்வத்தைப் பெற்றிட விழுப்புண் பெற்றோர் -- விழிகளை இழந்தோர் -- உயிரினைத் துறந்தோர் -- உடைமைகளைப் பறிகொடுத்தோர் -- செக்கிழுத்தோர் -- கஞ்சிக் கலயம் ஏந்தியோர் கல்லறையாக மாறியோர் -- துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர் -- தூக்குக் கயிற்றை முத்தமிட்டோர் அனைவரது காலடிகளிலும், அன்றலர்ந்த மல்லிகை தூவி வணங்குகின்றோம்!

அவர்களில் சிலர் -- சிலையாகிவிட்டனர்! சிலர் -- படமாகிவிட்டனர்! சிலர் -- நம் நெஞ்சில் நிலையாகிவிட்டனர்!

நெருப்பாக மூண்டெழுந்த அந்நாள் ஆதிக்கத்தை அன்பு நீரூற்றி அணைத்திட்ட பெருமான் அண்ணல் -- அவர் வழி நின்று தாயக விடுதலைக்குத் தன்னலம் துறந்து களம் புகுந்த தமிழ்நாட்டுத் தானைத் தலைவர் பெருமக்கள் -- அணி அணியாய்த் திரண்டெழுந்து அந்நிய ஆட்சிதனைத் தங்கள் வீர மூச்சால் ஊதிக் கலைத்த செந்தமிழ் மறவர்குடிப் பெருமக்கள் -- அவரெல்லாம் சிந்திய வியர்வை வெள்ளம் -- பெய்திட்ட குருதி மழை -- பொழிந்த தண்ணீர் -- சுதந்தரப் பயிருக்கு உரமாகும்!

பயிர் நடுவே களையின்றிப் பாதுகாப்பதற்கும் -- நெல் மணிகள் பதராகாமல் பார்த்துத் தடுப்பதற்கும் -- நேரம் பார்த்து நீர் பாய்ச்சுவதற்கும் -- நோய் நொடிகள், பூச்சிப் புழுக்கள் அணுகாமல் விரட்டுவதற்கும் -- இந்த இருபதைந்து ஆண்டுகள் இடைவிடாது பணியாற்றியுள்ளோம்!

இயற்கையின் சோதனைகள் எண்ணிலடங்கா! எதிரிகளின் ஆக்கிரமிப்போ -- இரண்டு மூன்று தடவைகள்!

இத்தனைக்கும் ஈடு கொடுத்தோம்! இணையற்ற வெற்றிச் செய்திதனை இமயத்தின் நெற்றியிலே பொறித்துக் காட்டி, இங்குள்ளோர் மட்டுமல்லர் -- எங்குள்ளோர் ஆயினும், 'எமது ஒற்றுமை காணீர்' என்று பறை அறிவித்தோம்!

வெள்ளம்போல் எங்கள் கூட்டம்; உள்ளத்தால் ஒருவரே -- மற்ற உடலினால் பலராய்க் காண்பர் கள்ளத்தால் நெருங்கொணாதே -- என, 'வையம் கலங்கக் கண்டு உள்ளம் துள்ளும் நாள் இந்த நாள்' என்று மகிழ்கிறோம் -- ஆரத் தழுவி அகமலர் கண்டு -- முகமலர் ஒத்தி -- ஆனந்தப் பள்ளு பாடுகின்றோம்!

இருட் குகையில் இருபத்தைந்தாண்டுகட்குமுன்பு ஏற்றி வைக்கப்பட்ட அகல் விளக்கு -- அதனைப் புயலிலும் பெரு மழையிலும் அணையாது காக்கின்ற ஐம்பது கோடி மக்களின் கரங்கள்!

அந்தக் கரங்கள் -- மிகப் பெரும்பாலும் உழைக்கும் கரங்கள்! சம்மட்டிப் பிடித்துத் தழும்புகொண்ட கரங்கள்! ஏர் ஓட்டிக் காய்ப்பேறிய கரங்கள்! ஆலையின் சக்கரம் சுழற்றிடும் கரங்கள்! நாற்று நடுகின்ற கரங்கள்! நூல் நூற்றுத் தருகின்ற கரங்கள்!

பால் கிண்ணம் ஏந்தும் கரம் -- பாதாம், பிஸ்தா, பச்சை முந்திரி நொறுக்கும் கரம் -- மிக மிகக் குறைவு!

எல்லாக் கரங்களும் இந்திய மண்ணில் முளைத்த கரங்களே; அவற்றில் சில -- கரங்களாகவும், பல -- மரங்களாகவும் இருப்பானேன்? ஏற்றத்தாழ்வு இன்னும் இருந்திடவா இந்தச் சுதந்திரம் பெற்றோம் -- அன்று; இல்லை இல்லை -- இல்லவே இல்லை!

முல்லை நட்ட கொல்லையிலே கள்ளி முளைப்பானேன் காலில் குத்தித் தொல்லை பல தருவானேன்? -- இந்தக் கேள்விக்கு விடை கண்டிடத்தான் இன்று ஏற்கின்றோம் சபதம்!

இனி, நம் நாட்டில் இல்லார் இல்லை -- கல்லார் இல்லை -- நல்லார் மீது பாய்கின்ற வல்லார் இல்லை!

எங்கும் புதுமை--எதிலும் புதுமை--அனைத்தும் பொதுவுடைமை! அரங்கிலே போக்கிப் படிப்படியாக -- உறுதியாக நம் அரசு நடைபோடும் என்பதை நாடறியும்!"

--- முதலமைச்சர் கலைஞர்

(விடுதலை வெள்ளி விழாவையொட்டி நடைபெற்ற சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தில் ஆற்றிய உரையில்)

# நள்ளிரவில் கூடிய நாடாளுமன்றம்

## 25 ஆண்டுகட்குமுன் நிகழ்ந்ததை நினைவுறுத்தும் நிகழ்ச்சி

### விடுதலைக்குப் போராடிய தியாகிகட்கு அஞ்சலி

புதுடில்லி, ஆக. 16—

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இதே ஆகஸ்டு 15 நள்ளிரவில் இந்திய மக்கள் அடைந்த பெருமையும்--களிப்பும் நேற்று மீண்டும் எதிரொலித்தது.

நேற்றிரவு நடைபெற்ற நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில், 'மேலும் உற்சாகத்துடனும், சமாதானத்துடனும் நாட்டை முன்னேறச் செய்வோம்' என்று உறுதி எடுத்துக் கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும், விடுதலைக்காகச் செய்த தியாகங்களையும்--ஏற்ற இன்னல்களையும் நினைவுகூர்ந்தனர்.

குடியரசுத் தலைவர்—துணைக் குடியரசுத் தலைவர்—மக்களவைத் தலைவர் ஆகியோர் பேசியதும் தலைமையமைச்சர் இந்திரா காந்தி உரையாற்றினார்.

நாடு சுதந்தரம் பெற்று 25 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் 25 பீரங்கிக் குண்டுகள் வெடிக்கப்பட்டன; உடனே அவையில் கூடியிருந்தோர் அனைவரும் எழுந்து நின்று தியாகிகட்கு மௌன அஞ்சலி செலுத்தினர்.

நாடாளுமன்றக் கூட்டம் துவங்குவதற்குமுன், முக்கியத் தெருக்கள் வழியே தீப்பந்த ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

பல கட்டடங்களும் அழகுபடுத்தப்பட்டு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும், கூடியவரையில் சிக்கனம் கடைபிடிக்கப்பட்டிருந்தது.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி குறிப்பிட்டதைப் போல், சுதந்தரப் போராட்டக்காலத் தலைமுறையைச் சேர்ந்த பழம்பெரும் தலைவர்கள் யாரும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவில்லை.

புதிய தலைமுறையின் பிரதிநிதிகளிடம் தலைமையமைச்சர் இந்திரா காந்தி பேசிக்கொண்டிருந்ததை, பழம்பெருந் தலைவர்களின் உருவப் படங்கள் கவனித்துக் கொண்டிருந்தன.

குடியரசுத் தலைவர் வி. வி. கிரியும்—தலைமையமைச்சர் இந்திரா காந்தியும், பழைய—புதிய தலைமுறைகளை இணைக்கும் பாலமாகக் காட்சி தந்தனர்.

பழைய முறைகளிலிருந்து விடுபட்டுப் புரட்சிகரக் கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தைத் தலைமையமைச்சர் பேசும்போது வலியுறுத்தினார்; 'அப்போதுதான் வறுமையை விரட்டி, வளமான ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும்' என்று அவர் தெரிவித்தார்.

## சென்னை -- கும்மிடிப்பூண்டி மின்சார இரயில்

சென்னை, ஆக. 12—

சென்னை--விஜயவாடா இடையே மின்சார இரயில் பாதை போடப்பட்டிருப்பது தெரிந்ததே;

இந்தத்திட்டம் நிறைவேறிய பிறகு, சென்னைக்கும்—கும்மிடிப்பூண்டிக்கும் இடையில் மின்சார இரயில்கள் விடப்படும்.

தற்போது, சென்னைக்கும்—தாம்பரத்துக்கும் இடையே செல்லும் மின்சார இரயில்களின் அமைப்பில் இந்த இரயில்களும் இருக்கும்.

## டிராக்டர்கள் பெற்ற விவசாயிகள்

சென்னை, ஆக. 12—

"1971--72-ல், டிராக்டர்கள் கோரி வேளாண்மைத் தொழில் கழகத்தில் 756 பேர் பதிவு செய்துகொண்டார்கள்; 618 பேருக்கு டிராக்டர்கள் தரப்பட்டுள்ளது"

என்று சட்டப் பேரவையில் அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள், என். கிட்டப்பாவின் கேள்விக்கும் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## துளையிடும் கருவிகள் தொழிற்சாலை

சென்னை, ஆக. 12—

"இந்த மாநிலத்தில் சிறு பாசனத் திற்காகக் குழல் துளையிடும் கருவிகளைத் தயாரிப்பதற்கான செயற்குறிப்பு உள்ளதா? விவரங்கள் யாவை?"

என்று சட்டப் பேரவையில் என். கே. பழனிச்சாமி கேட்ட கேள்விக்கு, கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அளித்த பதில் வருமாறு:—

"சென்னை அரசினர் வேளாண்மைப் பொறியியல் பணிக்கூடத்தில் ரூ. 36 இலட்சம் செலவில் 12 மோதல் அதிர்ச்சி வகை துளையிடு கருவிகளும், 3 சுழலும் துளையிடு கருவிகளும் தயாரிப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றை வேளாண்மைத் துறை இயக்குனர் அனுப்பியிருக்கிறார்; அரசின் தற்போதைய நிதி நிலை காரணமாக 1972 அக்டோபர் வரை இத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது; இது பின்னர் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்."

## உப்பளங்கள்-- நவீனப்படுத்த கோரிக்கை

சென்னை, ஆக. 12—

"தமிழ்நாட்டிலுள்ள உப்பளங்களை நவீனப்படுத்துவதற்குத் திட்டம் உண்டா?"

என்று சட்டப் பேரவையில், என். கிட்டப்பா கேட்டார்.

"தமிழ்நாட்டில் உப்பளங்களை நவீனப்படுத்த வேண்டிய அவசியம் பற்றி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம்"

என்று அமைச்சர் செ. மாதவன் பதிலளித்தார்.

# அடிமை விலங்கொடித்த வீரர்கட்கு நினைவு அஞ்சலி

## 25-ஆம் ஆண்டு சுதந்தர நாள் வெள்ளி விழாவில் தமிழகத்தின் சூளுரை

சென்னை, ஆக. 14--

அடிமை விலங்கொடித்து ஆண்டுகள் 25 உருண்டோடிவிட்டன; இதனை நினைவு கூர்ந்து, விடுதலை வீரர்கள் -- தியாகத் தலைவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு வீர வணக்கம் செலுத்தியது!

நடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்த்து -- நடக்கவேண்டிய பாதைபற்றி ஒழுங்காகத் திட்டமிட்டுப் பணியாற்ற உறுதி மேற்கொண்டது!

காழ்ப்பு உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்து -- அனைவரும் நாட்டின் எதிர்கால நல்வாழ்விற்கு ஒருசேரச் சிந்தித்துப் பணியாற்ற வேண்டுமென சூளுரை ஏற்றது!

25 ஆண்டுகளுக்குமுன்பு -- 1947-ல் இந்தியா சுதந்தரம் அடைந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளை நினைவுகூரும் அளவில் கடந்த திங்களன்று நள்ளிரவில் தமிழ்நாடு சட்டப் பேரவை -- மேலவை உறுப்பினர்கள், சட்டமன்ற மண்டபத்தில் கூடி சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு இரண்டு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்று நினைவு அஞ்சலி செலுத்தினர்.

இரு அவைகளின் உறுப்பினர்களும் நள்ளிரவில் கூடி -- நாட்டின் நலனுக்கான பணிகளில் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதாக உறுதி ஏற்றது -- இந்த இரு அவைகளின் வரலாற்றிலேயே இதுதான் முதல் தடவையாகும்.

ஆகஸ்டு 14-ம் நாள் இரவு 10 45 மணியளவில் சட்டப் பேரவைகளின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

மல்லிகை மணம் கமழ – வண்ண ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த சட்டமன்ற மண்டபத்தில் -- அவைத் தலைவரின் இருக்கைக்கு மேலே திருவள்ளுவர் -- காந்தியார் -- அண்ணா -- இராஜாஜி ஆகியோரின் உருவப் படங்கள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன.

சென்னையிலுள்ள தூதுவரகங்களின் அதிகாரிகள் -- வருவாய் வாரிய உறுப்பினர்கள் -- தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் -- பல்வேறு துறைகளின் தலைமை அதிகாரிகள், செயலாளர்கள் -- போலீசு இன்ஸ்பெக்டர் ஜெனரல் -- போலீசுக் கமிஷனர் -- நகரப் பிரமுகர்கள் ஆகியோர் பார்வையாளர்களாக வந்திருந்தனர்.

ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், அவைக்கு அழைத்துவரப்பட்டதும், அனைவரும் எழுந்து நின்றனர்.

'நீராரும் கடலுடுத்த...' என்று தொடங்கும் தமிழ்த் தாய் வணக்கப் பாடல் ஒலித்தது.

பின்னர் ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், சுதந்தர நாள் வெள்ளி விழா உரையாற்றுகையில், சனநாயகச் சிந்தனையை வளர்க்கும்படியும் -- மக்களுக்கு சனநாயக வாழ்க்கை முறையை ஏற்படுத்தும்படியும் -- நம்முடைய சனநாயகத்தின் வேர்களைப் பலப்படுத்தும்படியும் அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

அதனையடுத்து, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் எஸ். எஸ். இராமசாமி படையாச்சி, ஏ. ஆர். தாமோதரன், திருமதி டி. என். அனந்தநாயகி, சா. கணேசன், திருப்பூர் மொய்தீன், ஏ. ஆர். பெருமாள், கே. டி. கே. தங்கமணி, கே. இராசாராம் நாயுடு, ம. பொ. சிவஞானம், அவை முன்னவர் நாவலர் நெடுஞ்செழியன், மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு, பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசினர்.

சரியாக இரவு 12 மணியானதும் அனைவரும் 2-நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்று -- சுதந்தரப் போரில் உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்தினர்; அதன்பின், தேசியக் கீதத்துடன் சுதந்தர வெள்ளி விழா நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

## சென்னை மாநகராட்சி நினைவு அஞ்சலி

### புதிய வேகத்துடன் பணியாற்ற உறுதி

சென்னை, ஆக. 16—

சுதந்தர நாள் வெள்ளி விழாவையொட்டி ஆகஸ்டு 14-ம் நாள் இரவு நடைபெற்ற சென்னை மாநகராட்சி சிறப்புக் கூட்டத்தில், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் பாராட்டும் -- நினைவு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தியாகிகளின் நினைவாக இரண்டு நிமிட நேரம் அனைவரும் அமைதியாக எழுந்து நின்று வீர வணக்கம் செலுத்தினர்.

புதிய உத்வேகத்துடனும் விரைவுடனும் நகர மக்களுக்குப் பணியாற்றுவதாக மேயர் -- துணை மேயர் -- கட்சித் தலைவர்கள் -- கமிஷனர் ஆகியோர் உறுதி மேற்கொண்டனர்.

சென்னை மாநகராட்சியின் 284 ஆண்டுக்கால வரலாற்றில், நள்ளிரவில் கூட்டம் நடைபெற்றது இதுதான் முதல் தடவையாகும்.

### கலைஞர் ஒளி விளக்கேற்றினார்

இதற்கு முன்னதாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சிறப்பு நிகழ்ச்சி ஒன்றின்மூலம் ரிப்பன் கட்டடத்திலுள்ள அலங்கார மின் விளக்குகளை ஒளிபெறச் செய்தார்.

## கலைஞர் தலைமையில் வெள்ளி விழாக் கவியரங்கம்

சென்னை, ஆக. 14—

சென்னை வானொலி நிலையத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வெள்ளி விழாக் கவியரங்கம் இராஜாஜி மண்டபத்தில் இன்று காலை 10 மணியளவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அனைவரையும் எழுத்தாளர் அகிலன் வரவேற்றார்.

'விடுதலை வீரர்கள்' என்ற பொதுத் தலைப்பில் நடைபெற்ற இந்தக் கவியரங்கில்—பாரதியார் பற்றி யோகி சுத்தானந்த பாரதியார்—வ. உ. சிதம்பரம்பிள்ளை பற்றி எஸ். டி. சுந்தரம்—வ. வே. சு. ஐயர் பற்றி திருமதி சௌந்தரா கைலாசம் இயற்றிய கவிதையை அவரது மகள் பத்மினி—சுப்பிரமணியச் சிவா பற்றி கொத்தமங்கலம் சுப்பு—சண்பகராமன் பிள்ளை பற்றி வானம்பாடி—வாஞ்சிநாதன் பற்றி நே. சி எஸ். அருணசலம்—திருப்பூர் குமரன் பற்றி கொ. மு. சி. ரகுநாதன்—பெயர் தெரியாத் தியாகிகள் பற்றி கண்ணதாசன் ஆகியோர் கவி பாடினர்.

## தன்னிறைவை நோக்கி 25 ஆண்டுகள்

### கண்காட்சி நிகழ்ச்சியில் கலைஞர் கருத்துரை

சென்னை, ஆக. 14—

மத்திய அரசு செய்தி -- ஒலிபரப்புத் துறையினர் விடுதலைத் திருநாள் வெள்ளி விழாவையொட்டி சென்னையில் கலை விழா கண்காட்சி நடத்துகின்றனர்.

'தன்னிறைவை நோக்கி 25 ஆண்டுகள்' என்ற இந்தக் கண்காட்சி, சென்னைக் கடற்கரைச் சாலையிலுள்ள பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்தில் நடக்கிறது.

விழாவை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்து பேசுகையில் கூறியதாவது:—

"கடந்த 25 ஆண்டுக்கால வரலாற்றை இந்தக் கண்காட்சி விளக்குகிறது; பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவங்கள் -- அதன் கதாநாயகர்கள் -- வரலாற்றை உருவாக்கியவர்கள் -- வரலாற்றில் திருப்புமுனை ஏற்படுத்தியவர்கள் ஆகியவர்களின் மகிமையை இந்தக் கண்காட்சி விளக்குகிறது.

25 ஆண்டுகளுக்கு முன்பு, 'இந்தியா விடுதலை பெறுமா -- பெறாதா' என்ற கேள்விக்குறி, விடுதலை பெற்றதும் முற்றுப் புள்ளியாக மாறியது!

ஆகஸ்டு 15-ம் நாள் ஆண்டுதோறும் வருகிறது; என்றாலும், 25 ஆண்டு நிறைவினை இப்போது சந்திக்கிறோம்.

விடுதலை வீரர்கள் நம் மண்ணைக் காக்க மரணத்தை தழுவினார்கள் -- விழுப்புண்கள் பெற்றார்கள்; அவர்களுக்கு நன்றிகாட்டச் சிலைகள் அமைக்கிறோம்; கல்லறைகள் அமைக்கிறோம்; அங்கு அஞ்சலி செலுத்துகிறோம் -- மாலையிடுகிறோம்.

மாலை போடுவதும் -- மண்டபம் அமைப்பதும்--சிலைகள் அமைப்பதும் நிச்சயம் தேவைதான் என்றாலும், அவர்கள் உண்மையிலேயே மனநிறைவு பெறுகின்ற வழியில் அவர்கள் காட்டிய கொள்கை -- இலட்சியம் -- எழுச்சி ஆகியவற்றைப் பின்பற்றி அதை நிறைவேற்றப் பாடுபட வேண்டும்; எத்தகைய எழுச்சியும் முன்னேற்றமும் நாட்டில் ஏற்பட வேண்டுமென்று நினைத்தார்களோ அத்தகைய முன்னேற்றமும் எழுச்சியும் ஏற்பட அரசுகளும் பாடுபடவேண்டும்.

பல்வேறு இடர்ப்பாடுகளைக் கடந்து--போர்ப் புயலைத் தாங்கி --தளராமல் தயங்காமல் வெற்றி நாளை வெள்ளி விழா நாளாகக் கொண்டாடுகிறோம்.

கடந்த 25 ஆண்டுக்காலச் சாதனை ஏராளம் என்றாலும், கோடிக் கணக்கான மக்களின் நிறைவுக்கு ஏற்ற அளவு இல்லை என்பதால், இனியும் வேகமாக உழைத்து -- தீவிரமாகப் பணியாற்றிட வேண்டும்.

கிராமங்களில் வாழும் அன்றாடம் காய்ச்சிகள் நாட்டையும்--நானிலத்தையும் அறியும் வகையில் அவர்களுக்கு செழிப்பான வாழ்வு அமைத்துத் தர உழைத்திட வேண்டும்"

வானொலி நிலைய அதிகாரி வி. கிருஷ்ணசாமி வரவேற்றுப் பேசினார்.

விளம்பரப் பிரிவு அதிகாரி ஓ. பத்மநாபன் நன்றி கூறினார்.

## ஆளுநர் விருந்து

சென்னை, ஆக. 14—

விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி ஆளுநர் கே. கே. ஷா இன்று மாலை ஒரு விருந்து அளித்தார்.

சி. இராசகோபாலாச்சாரியார் -- முதலமைச்சர் கலைஞர் -- தமிழக அமைச்சர்கள் -- உயர் நீதிமன்ற நீதிபதிகள் -- சட்டமன்ற உறுப்பினர்கள் -- தூதரகப் பிரதிநிதிகள் -- மற்றும் பிரமுகர்கள் விருந்துக்கு வந்திருந்தனர்.

விருந்துக்குப் பிறகு கே. பி. சுந்தராம்பாள், கலைமணி சி. எஸ். ஜெயராமனின் இன்னிசைக் கச்சேரியும், திருமதி எம். எல். வசந்தகுமாரியின் புதல்வி செல்வி ஸ்ரீவித்யாவின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடந்தது.

400 சுதந்தரப் போராட்ட வீரர்கள் -- சமூக ஊழியர்கள் -- கலைஞர்கள் -- விளையாட்டு வீரர்கள் விருந்துக்கு வந்திருந்தனர்.

சென்னை ரெஜிமெண்டில் சென்டர் பாண்டு குழுவுக்கும் -- தமிழ்நாடு தனி பாண்டு குழுவுக்கும் ஆளுநர் கேடயங்களை வழங்கினார்.

## போர் வீரர்கட்கு புகழாரம்

### நினைவு மண்டபத்தில் கலைஞர் ஒளி விளக்கேற்றினார்

நேற்று நள்ளிரவுக்கு சிறிதுமுன், கோட்டைக்கு அருகிலுள்ள போர் வீரர் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த வீரத் தியாகிகட்கு மரியாதை செலுத்தப்பட்டது.

அப்பகுதியில் அலங்கார மின்சார ஒளி விளக்குகளை முதலமைச்சர் கருணாநிதி ஏற்றி வைத்தார்.

அதுபோது அவர், 'நாட்டுக்காக உயிர்நீத்த சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கட்கு அஞ்சலி செலுத்துவதாக'க் குறிப்பிட்டார்.

இராணுவப் பாண்டு சோகக் கீதம் இசைத்தது; மக்கள் இரண்டு நிமிட நேரம் மவுனமாக நின்று நினைவு அஞ்சலி செலுத்தினர்.

இதுவரையில், 'போர் வீரர் நினைவு மண்டபம்' என்று அழைக்கப்பட்டுவரும் அந்தப் பகுதியை, வெற்றி நினைவு மண்டபமாகச் சீரமைக்கக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது; அக்குழுவுக்கு, சென்னை ஷெரீப் எம். ஏ. எம். இராமசாமி தலைவராவார்; அவர், கூடியிருந்த மக்களை வரவேற்றார்; குழுவின் மற்றோர் உறுப்பினரான ஏ. எல். சீனிவாசன் நன்றி கூறினார்.

## கவிதை நூல் வெளியீட்டு விழா

உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் குருவிக்கரம்பை ஏ. சண்முகம் கவிதைகள் வெளியீட்டு விழா, 17--8--72 மாலை 6-மணிக்கு சென்னை -- அண்ணா சாலை மத்திய நூலக மண்டபத்தில் நடைபெறும்; இரா. சனார்த்தனம் தலைமையில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் நூலை வெளியிடுவார்; துணைமேயர் என். வி. என். சோமு, இளங்கோவன் எம். எல். ஏ., பி. சி. கணேசன், கா. இராசா முகம்மது ஆகியோர் பேசுவர்.

# சென்னையில் கோலாகலமிக்க விழா

## முப்படை அணிவகுப்பு-அலங்கார வண்டிகள் ஊர்வலம்

### கடற்கரையில் அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டம்

சென்னை, ஆக. 16—

இந்திய விடுதலை நாள் வெள்ளி விழாவை நேற்று தமிழகத் தலைநகர் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தது,

விழாவை முன்னிட்டு சென்னை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது; அரசின் தலைமைச் செயலகம் உள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை உள்ளிட்டு அரசுப் பணிமனைகள் அனைத்தும் மின்னொளி விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

### அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு

நேற்று மாலை கடற்கரை காந்தி சிலைக்கு அருகில் அணிவகுப்பு மரியாதையுடன் நடைபெற்ற அலங்கார வண்டிகள் ஊர்வலத்தை மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம், ஆளுநர் கே. கே. ஷா, முதலமைச்சர் கலைஞர் ஆகியோர் அமர்ந்திருந்து பார்த்தனர்.

முப்படைகள்—காவல் துறையினர்—சிறப்புக் காவல் துறையினர்—ஊர்க் காவல் படையினர்—சீரணிபினர்—என்.சி.சி. மாணவர்கள் — சாரணப் படையினர் ஆகியோர் அணிவகுப்பு மரியாதை செய்தனர்.

இந்த அணிவகுப்பைத் தொடர்ந்து ஆறு விமானங்களும் தாழப் பறந்து வந்தன.

தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் ஒவ்வொரு துறையினர் சார்பிலும் அலங்கார ஊர்திகள் ஊர்வலமாக வந்தன.

இலட்சக்கணக்கான மக்கள் கடற்கரைச் சாலையின் இருமருங்கிலும் நின்று ஊர்வலத்தைப் பார்த்தனர்.

### பொதுக்கூட்டம்

அடுத்து, திருவல்லிக்கேணிக் கடற்கரைச் சீரணி அரங்கில் அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் கலைஞர் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் செயராம ரெட்டியார் எம்.எல்.சி. (இந்திரா காங்கிரசு), எஸ். எஸ். இராமசாமி படையாச்சி எம்.எல்.சி., (உழைப்பாளர் கட்சி), கே. டி. கே. தங்கமணி (வலது கம்யூனிஸ்டு), ஏ.ஆர். தாமோதரம் எம்.எல்.சி. (ஐக்கியக் கட்சி), கே. இராசாராம் நாயுடு எம்.எல்.சி. (சிண்டிகேட்), கே.எஸ். அப்துல் வகாப் எம்.எல்.சி. (லீக்), குன்றக்குடி அடிகளார், ஏ. ஆர். பெருமாள் (பார்வர்டு பிளாக்), சா. கணேசன் [சுதந்தரா] ஆகியோர் பேசினர்.

இறுதியாக, மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் உரையாற்றினார்.

சொற்பொழிவுகள் முடிந்ததும், மெல்லிசை மன்னர் விசுவநாதன் குழுவினர் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

அடுத்து நடைபெற்ற வாண வேடிக்கைகளைக் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

நாட்டுப் பண்ணுடன் விழா நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

# ஏழைகளுக்கு வீட்டுமனை

## தனியார் நிலத்தை விலை கொடுத்து வாங்குவதில் ஏற்பட்டுள்ள சிரமம்

### அமைச்சர் சத்தியவாணிமுத்து நிலைமை விளக்கம்

சென்னை, ஆக. 11—

"நாடு சுதந்தரமடைந்து 25 ஆண்டுகள் ஆகியும், ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் குடி மனை இல்லாமல் தவிக்கும் நிலைமை இருக்கிறது; எனவே, தமிழ்நாடு முழுவதிலும் குடி மனை இல்லாத ஏழைகள் எத்தனைப் பேர் என்று கணக்கிட்டு -- அவர்கள் அனைவருக்கும் குடி மனை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் சி. வி. எம். அண்ணாமலை வினவினார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து :— "ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் -- மற்றும் உள்ள ஏழைகளுக்காக ஏறத்தாழ 5-இலட்சம் பேருக்கு அரசாங்க நிலம் வழங்கியிருக்கிறோம்; அதில் ஓர் இலட்சம்பேர் தாழ்த்தப்பட்ட மக்களாவர்.

"இதற்காகத் தனியார் நிலத்தை விலை கொடுத்து வாங்குவதில் சிரமம் ஏற்படுகிறது; சிலர் கொடுக்க மறுக்கிறார்கள் -- நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள்; இதனால்தான் தாமதம் ஏற்படுகிறது; இல்லையேல் விரைவில் தர இயலும்."

மரந்தாமன் (தி.மு.க):— "ஏழைகள் -- தாழ்த்தப்பட்ட மக்களுக்கான குடிமனைக்கு நிலம் தர தனியார் மறுத்தால், அந்நிலத்தைக் கட்டாயமாகக் கையகப்படுத்த அரசாங்கம் முன்வருமா ?"

அமைச்சர் :— "ஒருவருக்கு உடனடியான சொத்தைக் கட்டாயமாக எடுத்துக்கொள்ளும் எண்ணமில்லை; 'கொடுக்க முடியாது' என்று மறுக்க அவர்களுக்கு உரிமை உண்டு; பொதுமக்கள் நலனைக் கருதி எடுத்துக்கொள்ள சட்ட பூர்வமான வழிகள் இருக்கின்றன; அதன்படி எடுக்கப்படுகின்றன.

"தனியார் நிலத்தை ஏழை மக்களின் குடிமனைக்காகக் கையகப் படுத்தியதால் பலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றனர்; அப்படிப்பட்ட வழக்குகள் பல இன்னும் தீர்வு செய்யப்படாமல் இருக்கின்றன; எனவே, அந்த வழக்குகளை விசாரித்து விரைவில் முடிவு செய்வதற்குத் தனி நீதிபதிகளை நியமிக்கலாமா என்று சட்டத்துறை பரிசீலனை செய்துவருகிறது"

# கைதிகளுக்குத் தண்டனைக்குறைப்பு

### மத்திய அரசுதரும் விளக்கம்

புதுடில்லி, ஆக. 16—

ஆக. 15-ந் தேதிக்கு முன்னதாக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு விடுதலை வெள்ளிவிழாவை யொட்டி -- இத்தண்டனையை ஆயுட் காலச் சிறைத் தண்டனையாகக் குறைப்பதென்று அரசு தீர்மானித்துள்ளது.

ஆனால், கொடூரமான குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள்மீது அவ்வாறு கருணை காட்ட வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது.

மத்திய அரசு அதிகாரத்துக்கு உட்பட்டவர்கள் தொடர்பாகக் குடியரசுத் தலைவர் கருணை மனுக்களை ஏற்று எவ்வாறு மரண தண்டனையை ஆயுட்காலத் தண்டனையாகக் குறைப்பார் என்றும், ஆளுநர் முன்னர் வரும் கருணை மனுக்கள் தொடர்பாக இதேபோன்ற கொள்கையை மேற்கொள்ளும்படி மாநில அரசுகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அதிகார பூர்வ பத்திரிகைக் குறிப்பு தெரிவிக்கிறது.

காந்தி நூற்றாண்டு விழாவின் போது மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு இதேபோன்று அத்தண்டனை ஆயுட்கால தண்டனையை குறைக்கப்பட்டது.

"அரசியல் மற்றும் பிற காரணங்களுக்காகக் கொலை செய்தவர்கள் இடையே அவ்வாறு கருணை மனுக்கள் ஏற்கப்படுவதில் எவ்வித பாகுபாடும் இராது" என்று விவரமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# நகர்ப் பகுதிகளில் ஓடும் அரசுப் பேருந்துகள்மூலம் கிடைத்த வருமானம்

சென்னை, ஆக. 13—

"நகர்ப் பகுதிகளில் ஓடுகின்ற அரசுப் பேருந்துகள்மூலம், 1970--71-ல் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ?"

என்று சட்டப் பேரவையில், என். கிட்டப்பா கேட்ட கேள்விக்கு அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அளித்த பதில் வருமாறு :—

"1970-71-ம் ஆண்டில் வசூலான மொத்தத் தொகை ரூ 67,57,975 ஆகும்."

பழனிச்சாமி :— "1970 -- 71-ல் தனியார் பேருந்து அதிபர்களிடமிருந்து அரசு எடுத்துக்கொண்ட பேருந்துகளுக்கு இழப்பு ஏதேனும் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?"

அமைச்சர் இராமச்சந்திரன் :— "1970-71-ம் ஆண்டில் தனியார் பேருந்து எதையும் நாட்டுடைமையாக்கவில்லை; எனவே இழப்பீடு தருவதுபற்றிக் கேள்வி எழவில்லை."

# பள்ளிகளில் மதபோதனை

## கட்டாயப்படுத்தினால் நடவடிக்கை

சென்னை, ஆக. 12—

"கல்வி நிலையங்களில் மத போதனை, விருப்பத்தின் பேரில் நடைபெற அனுமதிக்கப்படுகிறது; 'மத போதனை வேண்டும்' என்று மாணவர்கள் எழுதிக் கொடுத்தால் பள்ளிப் பாட நேரத்தில் அல்லாமல் வேறொரு நேரத்தில் மதவகுப்புகள் நடத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறது"

என்று, சட்டப் பேரவையில், கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

என். கிட்டப்பா :— "மத போதனை நடைபெறும் பள்ளிகளில் நாத்திகப் பிரசாரம் நடத்தவும் அனுமதிக்கப்படுமா ?"

நாவலர் :— "மத போதனை பள்ளி நேரத்தில் நடத்தப்படுவதில்லை; விருப்பமுள்ளவர்களுக்கு -- வசதியுள்ள பள்ளிகளில் -- வேறுநேரங்களில் நடத்தப்படுகிறது; நாத்திகம் என்பது ஒரு மதமல்ல; அது கருத்தே ஆகும்."

ஏ. சி. நரசிம்மன் :— "சில பள்ளிகளில் மதசம்பந்தமான திரைப் படங்களைக்கூடத் திரையிட்டு, மதப் பிரசாரம் நடத்தப்படுகிறதே -- இது தடுக்கப்படுமா ?"

பதில் :— "அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு மாணவர்கள் வர வேண்டும் என்று வற்புறுத்தப்படுவார்களேயானால் -- அதுபற்றி புகார் வருமானால் -- தக்க நடவடிக்கை எடுக்கப்படும்."



சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தில்......

# அண்ணாவின் அறிவுரை -- நாவலர் மேற்கோள்

சென்னை, ஆக. 14--

விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தில், அவையின் முன்னவரான கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், 'சுதந்தரத்துக்காக யார் பாடுபட்டிருந்தாலும் கட்சி வேற்றுமையின்றி அவர்கள் கவுரவிக்கப்பட வேண்டும்' என்று அறிவுறுத்தியிருந்ததை நினைவு கூர்ந்தார்.

"நாட்டில் நிலைத்துவிட்ட சனநாயக மரபுகளைக் காப்பாற்றப் பாடுபடுவோம்" என்று அவர் உறுதி தெரிவித்தார்.

"சிங்கத்தின் பார்வை நோக்கும் விதத்தில், வந்த வழியைத் திரும்பிப் பார்த்துவிட்டு -- செல்லவேண்டிய வழியை நிமிர்ந்து பார்த்து முன்னேறுவோம்" என்று அவர் உறுதி கூறினார்.

## எல்லோருக்கும் சமமான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆகியும்கூட, நமது சமுதாயம் வறுமை -- அறியாமை ஆகியவைகளிலிருந்து விடுபடவில்லை.

சுதந்தரம் பொருள் படைத்ததாக இருக்கவேண்டுமானால், அனைவருக்குமே தாங்கள் சமமானவர்கள் என்ற எண்ணம் தோன்றியாகவேண்டும்.

இத்துறையில் தமிழகம் சிறந்த பணியாற்றி வருகிறது; கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பரிசுகளும் -- அன்பளிப்புக்களும் தந்து தமிழகம் ஊக்குவித்து வருவது பாராட்டப்படக் கூடியதாகும்.

தமிழகத்தில் சுதந்தர நாள் விழாவுக்கு ஒரு மத்திய அமைச்சரை அழைக்க வேண்டுமென்று முதலமைச்சர் கலைஞர் கருதியது சிறந்த யோசனையாகும்; இப்படிப் பங்கேற்று குடியரசுப் பண்பாட்டைச் சிறந்த முறையில் சித்தரிப்பதற்கு உதவியாக இருக்கும்."

## தமிழக அரசு மரியாதை காட்டும் மரியாதை

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது :—

"ஒரு கல்லூரி துவங்கவேண்டுமென்றால அக்கல்லூரிக்கு முதலில் ரூ. 5 லட்சம் திரட்டித் தரவேண்டுமென்பது அரசு நிர்ணயித்துள்ள நிபந்தனையாகும்; ஆனால், இந்தக் கல்லூரிக்கு ரூ 1 50 இலட்சம் மட்டுமே திரட்டப் பட்டிருக்கிறது.

ஆயினும், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது டாக்டர் அம்பேத்கார் கொண்டிருந்த அக்கறையை உணர்ந்து, அரசு தனது கொள்கையைத் தளர்த்தி இக்கல்லூரிக்கு அனுமதி வழங்கியிருக்கிறது."

## சென்னை - திருவனந்தபுரம் நேரடித் தொலைபேசி வசதி

புதுடில்லி, ஆக. 12—

"நேரடி வெள்யூரத் தொலைபேசி முறையில், சென்னை—திருவனந்தபுரம், மற்றும் கேரளத்திலுள்ள முக்கிய நகரங்கள் ஆகியவற்றை இணைப்பதற்கான பணி முன்னேறி வருகிறது"

என்று மக்களவையில், தகவல் தொடர்பு அமைச்சர் எச். என். பகுகுணா தெரிவித்தார்.

"ஒரச்சு நில அடிக் கம்பி முறை கோயமுத்தூரிலிருந்து எர்ணாகுளம், திருவனந்தபுரம் ஆகிய இரு இடங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது; சென்னை -- எர்ணாகுளம், சென்னை -- திருவனந்தபுரம் ஆகிய இடங்களை இணைக்கும் தானியங்கி இணைப்பகங்கள் முறையே 1974—75, 1975—76-ம் ஆண்டுகளில் செயல்படத் துவங்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

# தமிழ் நாட்டுக்கு 9,488 டன் 'லெவி' சர்க்கரை

திருச்சி, ஆக. 11—

நடப்பு மாதத்துக்காகத் தமிழ் நாட்டுக்கு 9,488 டன் 'லெவி' சர்க்கரையை மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது; ('லெவி' சர்க்கரை என்பது நிர்ணய விலைக்கு விற்கப் படுவதாகும்.)

'லெவி' சர்க்கரையின் விலை இதுவரை கிலோ ரூ 2 ஆக இருந்து வந்தது; அது இந்த மாதம் முதல் ரூ. 1 85 ஆகக் குறைப்பதெனத் தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்தச் சர்க்கரையின் மொத்த விநியோகம், கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நடக்கிறது, தங்களுக்கு அனுமதிக்கப்படும் இலாபம் விகிதம் போதாதெனக் கூட்டுறவு நிறுவனங்கள் முறையிட்டுக் கொண்டதன் பேரில், குவிண்டாலுக்கு ரூ. 1.50 என்ற இலாப விகிதத்தை ரூ 2 ஆக உயர்த்த அரசு முடிவு செய்திருக்கிறது.

## திறந்த வெளிச் சிறை

### மேலும் இரண்டு இடங்களில் ஏற்படும்

சென்னை, ஆக. 12—

"திறந்தவெளிச் சிறைச்சாலைகள் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?"

என்று சட்டப் பேரவையில் கா. வேழவேந்தன் கேட்டார்; இதற்குச் சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பதிலளித்ததாவது :—

"தமிழ்நாட்டில் தற்போது தஞ்சை மாவட்டத்தில் உள்ள நீலகிரித் தோட்டத்திலும், கோவை மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூரிலும் -- சேலத்திலும் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் உள்ளன; இராமநாதபுர மாவட்டம் சிவகங்கை தாலுகாவில் உள்ள முத்துப்பட்டி கிராமத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள வேங்கடமங்கலம் கிராமத்திலும் திறந்தவெளி சிறைச்சாலைகள் அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது."

## தமிழ்நாட்டில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்

சென்னை, ஆக. 12—

"தமிழ்நாட்டில் தற்போது 9 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன; இவற்றில் 8 இலாபத்தில் நடக்கின்றன; ஒன்று இன்னும் உற்பத்தி தொடங்கவில்லை"

என்று, தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள், சட்டப் பேரவைக் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, இலெதர்ஸ் மணை ரோடு?) ... சென்னை ... அச்சிட்டு வெளியிடப்பெற்றது.